2002 அக்டோபர் 31]

(ஆ) தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2002). மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(இ) பேரவைக் கூட்டத்தை மாலையில் நடத்தக் கோருதல்

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோர் சார்பிலும் ஒரே ஒரு கோரிக்கை. இந்த ஒரு சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பிறகு முடித்துவிட்டு மீதியை மாலை 4—30 மணிக்கு எடுத்துக் கொண்டு 6—30 மணிக்குள் முடித்துவிடலாம். (குறுக்கீடுகள்) நாளைக்கு வர வேண்டியதில்லை. (குறுக்கீடு) ஊருக்குப் போக வேண்டும். நாளைக்கு வேண்டுமென்று நானே கேட்கவில்லை. இன்று மாலையே முடித்துவிடலாம். 6—30 மணிக்கு முடித்துவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுதே முடித்துவிடலாம். அலுவல் ஆய்வுக் குழுவிலே ஏற்கெனவே முடிவு செய்துவிட்டோம். இப்போதே முடித்துவிடலாம்.

@ 30—10—2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)–
தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு, 2002 – தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2002 அக்டோபர் 31] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர். (குறுக்கிடு)

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) பேரவைக் கூட்டத்தை மாலையில் நடத்தக் கோருதல் —தொடர்ச்சி

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக இன்னும் 19 மசோதாக்கள், சட்டமுன்வடிவுகள் எடுத்துக்கொள்ள வேண்டியிருப்பதால், இப்போது எல்லோரும் பசியோடு இருப்பதால், இப்போது நீங்கள் அவையை ஒத்திவைத்துவிட்டு, மீண்டும் 4—30 மணிக்குக் கூடி, விவாதம் இல்லாமல் 6—30 மணிக்குள் எல்லாவற்றையும் நிறைவேற்றி முடித்துவிடலாம் என்ற கோரிக்கையைத் தங்கள்முன் வைக்கிறேன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: விவாதம் இல்லாவிட்டாலும்கூட சரி. ஆனால் சட்டமுன்வடிவுகளில் சில தவறுகள் இருக்கின்றன. அதைச் சுட்டிக்காட்டித்தான் ஆகவேண்டும்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஆ) தமிழ் நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு, 2002 – தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.